**செய்தி வெளியீடு எண்: 487** **நாள்: 25.07.2018**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (25.7.2018) தலைமைச் செயலகத்தில், திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டம், மொண்டிப்பட்டி கிராமத்தில், தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் அலகு II-ல் 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள காகிதம் மற்றும் காகித அட்டை உற்பத்தி செய்யும் இயந்திரங்களின் உருளைகளை செப்பனிடும் இயந்திரத்தின் சேவையினை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக துவக்கி வைத்தார்கள்.

ஆண்டொன்றுக்கு இரண்டு லட்சம் டன் திறன் கொண்ட இருபுறமும் மேற்பூச்சு செய்யப்படும் அடுக்கு காகித அட்டை ஆலையை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 29.1.2016 அன்று துவக்கி வைத்தார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த 31.8.2016 அன்று சட்டப்பேரவை விதி எண் 110–ன் கீழ் வெளியிட்ட அறிவிப்பில், திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டம், மொண்டிப்பட்டி கிராமத்தில் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் அலகு II-ல் தேய்ந்த உருளைகளை செப்பனிடும் இயந்திரம் நிறுவப்படும் என்று அறிவித்தார்கள்.

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் அலகு II-ல் அமைந்துள்ள காகித அட்டை உற்பத்தி செய்யும் இயந்திரம் சுமார் 200 உருளைகளை வெவ்வேறு பகுதியில் உள்ளடக்கி அமைக்கப்பட்டுள்ளது. அவை அழுத்த உருளை, உலர வைக்கும் உருளை, மேற்பூச்சு செய்யும் இடத்தில் அமைக்கப்பட்ட உருளை போன்றவைகள் ஆகும். இவ்வனைத்தும் ரப்பர் அல்லது ஸ்டீலால் மூடப்பட்டிருக்கும் உருளைகள் ஆகும்.

நல்ல தரமுள்ள காகித அட்டைகளை உற்பத்தி செய்யும் பொருட்டு, குறித்த காலங்களில் இவ்வுருளைகள், மெருகூட்ட செய்தல், உருளையின் மேற்புறத்தரம், உருளையின் வடிவம் மற்றும் உருளையின் மேல் இருக்கும் கடினத் தன்மையை சரி செய்ய செப்பனிடப்பட வேண்டும். இவ்வுருளைகள் வழக்கமான கால இடைவெளியில் செப்பனிடவும், தாமதத்தை தவிர்க்கவும், உற்பத்தி தரத்தையும் திறனையும் குறைவுபடாமல் நிறைவு செய்யவும், செலவினத்தை குறைக்கவும், ஆலை வளாகத்திற்குள் இந்த

உருளைகளை செப்பனிடும் இயந்திரம் அடுக்கு காகித ஆலையின் தேவையினை கருத்தில் கொண்டு நிறுவப்பட்டுள்ளது.

இந்த உருளைகளை செப்பனிடும் இயந்திரமானது, நவீன தொழில்நுட்பம் கொண்டதாகவும், கணினியின் மூலம் துல்லியமாக செயல்படுத்தப்படும் திறன் கொண்டதாகவும் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், காகித ஆலையில் அமைந்துள்ள காகிதம் உற்பத்தி செய்யும் மூன்று இயந்திரங்களின் உருளைகளையும் செப்பனிடும் திறன் கொண்டது. இந்த செப்பனிடும் இயந்திரத்தை நிறுவுவதன் மூலம் இவ்வாலையின் செயல்திறன் அதிகரிக்கும்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு.எம்.சி. சம்பத், மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.வெல்லமண்டி என். நடராஜன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திருமதி எஸ். வளர்மதி, தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., தொழில் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. எஸ். சிவசண்முகராஜா, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**